# தமிழ்நாட்டில் ஒருபோதும் மதவாதம் நுழைய முடியாது!

## சட்டப்பேரவையில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் திட்டவட்டம்!

**சென்னை, ஏப். 30-**

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், காவல்துறை மானியக் கோரிக்கையின் போது சட்டமன்ற உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் பேசியதற்கு, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறுக்கிட்டுப் பதில் அளித்தார்.**

**அப்போது முதல்வர் அவர்கள், "தமிழ்நாட்டில் ஒருபோதும் மதவாதம் நுழைய முடியாது" என்று குறிப்பிட்டார்.**

சட்டப்பேரவையில் முதல்வர் அவர்கள் பேசியதாவது:-

இங்கு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்கள் உரையாற்றிய போது ஆடிட்டர் ரமேஷ் தொடர்பான கொலை பற்றிக் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார். அந்தக் கொலை என்பது அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் நடந்தது. அது தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

அதேபோன்று, காஷ்மீரில் நிகழ்ந்தது போன்று நடக்கக்கூடாது என்று இங்கே பேசியிருக்கிறார். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் அது போன்று நிச்சயமாக நடைபெறவே நடைபெறாது என்பதை உறுதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

காஷ்மீரில் நடைபெற்ற சம்பவம் தொடர்பாகப் பேசும்போதுகூட, ஒன்றிய அரசினுடைய பாதுகாப்பு குறைபாடு பற்றி இதுவரை நாங்கள் பேசவில்லை. நான் அந்தச் செய்தியைக் கேள்விப்பட்டவுடன், நான் தெளிவாகக் குறிப்பிட்டது என்னவென்று கேட்டால், காஷ்மீர் தொடர்பான பிரச்சினையைப் பொறுத்தவரையிலே, ஒன்றிய அரசு எடுக்கக்கூடிய எந்த நடவடிக்கையாக இருந்தாலும், தமிழ்நாடு நிச்சயமாக உறுதுணையாக இருக்கும் என்றுதான் நாங்கள் சொல்லியிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

எனவே, எந்தக் காரணத்தை கொண்டும் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை மதவாதம், உள்ளே நுழைய முடியாது, முடியாது, முடியாது என்பதை நான் தெளிவோடு சொல்லிக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டார்.

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

## தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்!

### பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு

கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் **தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்** வருகிற (03-05-2025 சனிக்கிழமை) காலை 10.30 மணி அளவில், சென்னை, கலைஞர் அரங்கில் நடைபெறும்.

அதுபோது மாவட்டக் கழகச் செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்** : கழக ஆக்கப் பணிகள்



"அண்ணா அறிவாலயம்"
சென்னை 600 018
நாள் : 28-04-2025.

**துரைமுருகன்,**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.

## பொல்லாத அ.தி.மு.க. ஆட்சிக்கு பொள்ளாச்சியே சாட்சி! துயர ஆட்சிக்கு தூத்துக்குடி துப்பாக்கிச் சூடே சாட்சி!

# ஊழல் வழக்குகளிலிருந்து தற்காத்துக்கொள்ள தமிழ்நாட்டின் உரிமைகளை அடகுவைத்தவர்கள் அ.தி.மு.க. ஆட்சியினர்!

## சட்டப்பேரவையில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிலடி!

**சென்னை, ஏப். 30-**

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், காவல் துறை மானியக் கோரிக்கையின் போது எதிர்க் கட்சித் தலைவர் எடப்பாடி கே.பழனிசாமியின் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறுக்கிட்டு அளித்த பதிலடி வருமாறு:-**

பேரவைத் தலைவர் அவர்களே,

நாளைய தினம் என்னுடைய பதிலுரை முழுமையாக இருக்கிறது. இருந்தாலும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஆதாரம் இல்லாத வகையிலே இங்கே பொத்தாம் பொதுவாக குற்றச்சாட்டுகள் சொல்கிற காரணத்தால் சில விளக்கங்களை நான் சொல்ல வேண்டியிருக்கிறது.

அதாவது, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், அவர்களுடைய ஆட்சியின் சாதனைகள் சிலவற்றை தலைப்புச் செய்திகளாகச் சொன்னார். அதேமாதிரி இப்போது நடந்து கொண்டிருக்கக்கூடிய ஆட்சியினுடைய அந்த நிலைமைகளையும் தலைப்புச் செய்திகளாகச் சொல்கிறார். ஆனால், தமிழ்நாட்டு மக்களைக் கேட்டால் அவர்கள் ஆட்சியில் பட்ட வேதனைகளைக் கண்ணீருடன் புலம்புவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பொல்லாத ஆட்சிக்கு பொள்ளாச்சியே சாட்சி, (மேசையைத் தட்டும் ஒலி) துயரங்களைக் கொடுக்கக்கூடிய ஆட்சிக்கு தூத்துக்குடி துப்பாக்கிச் சூடே சாட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) சாமானிய மக்களை வதைக்கக்கூடிய ஆட்சிக்கு சாத்தான்குளமே சாட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) அவமான ஆட்சிக்கு அ.தி.மு.க. ஆட்சியே சாட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டை பிளவுபடுத்தியதுதான் அ.தி.மு.க. ஆட்சியினுடைய சாதனை. எங்கும், எதிலும் commission, corruption, collection என ஊழலிலே திளைத்து அந்த ஊழல் வழக்குகளிலிருந்து தற்காத்துக்கொள்ள தமிழ்நாட்டின் உரிமைகளை எல்லாம் அடகு வைத்தவர்கள் யார் என்பது நாட்டு மக்களுக்குத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி)

### தி.மு.க. ஆட்சியில் குற்றங்கள் குறைவு!

இன்னொரு புள்ளிவிவரத்தையும் நான் சொல்ல விரும்புகிறேன். எதிர்க்கட்சித் தலைவர் தலைமையிலான ஆட்சியில் நடைபெற்றதை விட தற்போது தி.மு.க. ஆட்சியில் இந்த 4 ஆண்டுகளில் குற்றங்கள் குறைந்திருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) கொலை, கொள்ளை எல்லாம் சொன்னார் அல்லவா அதற்கு புள்ளிவிவரம் சொல்கிறேன். கடந்த 12 ஆண்டுகளில் 2024 ஆம் ஆண்டில்தான் கொலை சம்பவங்கள் குறைவாக நடந்திருக்கிறது. இன்னும் சொல்ல வேண்டுமென்றால் கடந்த 4 ஆண்டுகளாகவே ஒவ்வொரு ஆண்டும் கொலைகள் குறைந்துகொண்டுதான் இருக்கிறது. கொலை குற்ற விகிதம் ஒரு இலட்சம் மக்களுக்கு தேசிய சராசரி 2.2 என்றால், தமிழ்நாட்டில் அது 1.1 ஆக குறைந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அ.தி.மு.க. ஆட்சியில் அதிகபட்சமாக தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட ரவுடிகள் 1,929 பேர் என்றால், தி.மு.க. ஆட்சியில் கடந்த ஆண்டில் அதிகபட்சமாக 3,645 ரவுடிகள் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) A மற்றும் A+ ரவுடிகளின் எண்ணிக்கை 50 விழுக்காடாக குறைக்கப்பட்டிருக்கிறது.

காவல் நிலைய மரணங்கள் அடியோடு குறைக்கப்பட்டிருக்கிறது. எதிர்க்கட்சி தலைவரின் ஆட்சிக் காலத்தில் நடந்த காவல் மரணங்கள் 15. அதில் சாத்தான்குளம் காவல் நிலைய மரணத்தை யாரும் மறந்திருக்க முடியாது. ஆனால், தி.மு.க. ஆட்சியில் நான்கு ஆண்டுகளில் இது மூன்றாக குறைக்கப்பட்டு 2022 ஆம் ஆண்டிலிருந்து ஒரு காவல் நிலைய மரணம் கூட இல்லை என்கிற நிலையை நாம் ஏற்படுத்தி இருக்கிறோம். எதிர்க்கட்சித் தலைவரோட ஆட்சிக் காலத்தில் 4 ஆண்டுகளில் 14 ஆயிரத்து 174 பேர் குண்டர் சட்டத்தில் அடைக்கப்பட்டார்கள். ஆனால், தி.மு.க. ஆட்சியின் 4 ஆண்டுகளில் 15 ஆயிரத்து 899 பேர் குண்டர் சட்டத்தில் அடைக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆகவே, கொலை, கொள்ளை நடக்கவிட்டு ரவுடிகள் நடமாட்டத்தை தாராளமாக்கிய ஒரு ஆட்சியை நடத்தியவர்கள் சட்டம்ஒழுங்கையும், பொது அமைதியையும் சிறப்பாக வைத்திருக்கிற இந்த ஆட்சியைப் பார்த்து குறை சொல்வது இந்த ஆண்டினுடைய சிறந்த நகைச்சுவை என்றே நான் சொல்ல விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு குற்ற வழக்கை சிறப்பாக நடத்துவதற்கான அடையாளம், அதில் எவ்வளவு விரைவாக chargesheet file செய்யப்படுவது என்பது தான். நீதியைப் பெற்றுத் தர வழக்குப் பதிந்தால் மட்டும் போதாது, குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதும் முக்கியம். எனவே, நான் குறிப்பிட விரும்புவது, அந்தவகையில் பார்த்தால் எந்த வழக்காக இருந்தாலும் உடனடியாக வழக்கைப் பதிவு செய்து, விசாரணை நடத்தி விரைவாக chargesheet file செய்கிற அரசாக இந்த அரசு இருக்கிறது. கொலை, ஆதாயக் கொலை போன்ற வழக்குகளில், 95.2 விழுக்காடு குற்றப்பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. கொள்ளை வழக்குகளில், 98.4 விழுக்காடு குற்றப்பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. எனவே, தி.மு.க அரசின் சட்டம்ஒழுங்கு குறித்துப் பேசுவதற்கு அ.தி.மு.க.விற்கு எந்தத் தகுதியும் கிடையாது என்பதை அழுத்தந்திருத்தமாக தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

* * * * * *

### காவலர் காலிப்பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும்!

பேரவைத் தலைவர் அவர்களே,

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் காவல் துறையில் உள்ள பணியிடங்களைப் பற்றிக் குறிப்பிட்டா ர்கள். தமிழ்நாடு காவல் துறையைப் பொறுத்தவரையில், இரண்டாம் நிலைக் காவலர்களின் காலிப் பணியிடங்கள் ஆண்டுதோறும் நிரப்பப்பட்டு வருகின்றன. 2020-2021 ஆம் ஆண்டில் 10,329 பணியிடங்கள், 2022 ஆம் ஆண்டில் 3,271 பணியிடங்கள், 2023 ஆம் ஆண்டில் 2,599 பணியிடங்கள் என கடந்த மூன்று ஆண்டுகளில் மொத்தம் 16,199 இரண்டாம் நிலை காவலர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. மேலும், 2024-2025 ஆம் ஆண்டுக்கான இரண்டாம்நிலை காவலர் காலிப் பணியிடங்கள் 2,833 எனக் கணக்கிடப்பட்டு, தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. விரைவில் அந்தக் காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கான



அறிவிப்பும் வெளியிடப்படவிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

* * * * * *

### கண்காணிப்பு கேமராக்கள் பராமரிப்பு - ரூ.45 கோடி ஒதுக்கீடு!

பேரவைத் தலைவர் அவர்களே,

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் CCTV கேமராவைப் பற்றி குறிப்பிட்டார். CCTV கேமராவைப் பொறுத்தமட்டில், உங்களுடைய ஆட்சியில் அதாவது, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியிலிருந்த 4 ஆண்டுகளில் 747 காவல் நிலையங்களில் மட்டுமே வைக்கப்பட்டிருந்தன. ஆனால், தி.மு.க. ஆட்சியில் 831 காவல் நிலையங்களில் CCTV கேமராக்கள் நிறுவப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஆட்சியில் மாநிலம் முழுவதும் ஒரு இலட்சத்து 41 ஆயிரத்து 729 கேமராக்கள் வைக்கப்பட்டன என்றால், இப்போது திராவிட மாடல் அரசின் ஆட்சியிலே ஒரு இலட்சத்து 87 ஆயிரத்து 713 கண்காணிப்புக் கேமராக்கள் வைக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) இதுமட்டுமின்றி, கண்காணிப்புக் கேமராக்களின் storage capacityஐ அதிகரிப்பது, பழுதடைந்த கேமராக்களை மாற்றுவது உள்ளிட்ட பல்வேறு பராமரிப்பு பணிகளுக்காக 45 கோடியே 55 இலட்சம் ரூபாய் அளவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மொத்தத்தில் கண்காணிப்புக் கேமராக்களை வைத்திருக்கிறோம் என்று கணக்குக் காட்டும் முயற்சி அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் நடைபெற்றது. ஆனால், தி.மு.க. ஆட்சியில் கண்காணிப்புக் கேமராக்களை வைப்பது மட்டுமின்றி, அவற்றை முறையாகப் பராமரித்து குற்றத் தடுப்பு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தும் தீவிர முயற்சிகளை இந்த அரசுதான் எடுத்துள்ளது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

* * * * * *

### போராட்டங்களுக்கு அனுமதி!

பேரவைத் தலைவர் அவர்களே,

சாலைப் பாதுகாப்பு குறித்து எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார். 2017 ஆம் ஆண்டிலிருந்து தற்போது வரையிலுள்ள காலத்தில் மிகக் குறைவான சாலை விபத்துகள்தான் ஏற்பட்டு, மரணங்கள் பதிவாகியிருக்கின்றன. அதுவும் கடந்த ஆண்டுதான். மேலும், கடந்த ஆண்டு முதல் 3 மாதங்களில் நடைபெற்ற சாலை விபத்து மரணங்களை எடுத்துக்கொண்டால், 2022 ஆம் ஆண்டு இதே காலகட்டத்தில் அது 15 விழுக்காடு குறைந்துள்ளது. ஆண்டுதோறும் புதிய வாகனங்களும், போக்குவரத்து நெரிசலும் அதிகரித்து வருகின்ற போதிலும், சாலைப் பாதுகாப்பிற்கு நமது அரசு அளித்துவரும் முக்கியத்துவம் காரணமாக, சாலை விபத்து மரணங்கள் தொடர்ந்து குறைந்து வருகின்றன என்பது மிகவும் பாராட்டத்தக்க சாதனை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் போராட்டங்கள் நடத்துவதற்கு, கூட்டங்கள் நடத்துவதற்கு அனுமதி அளிப்பதில்லை என்ற ஒரு குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார். அது உண்மையாக இருக்கும் என்று நான் நம்பவில்லை. நிச்சயமாக அனுமதிக்கப்பட்டிருக்கும் இடத்திலே, அதுவும் அனுமதிக்கு apply செய்வதற்கு ஒரு குறிப்பிட்ட நாள் இருக்கிறது. அந்தக் குறிப்பிட்ட நாட்களுக்குள் நீங்கள் கொடுத்தால் நிச்சயமாக அனுமதி கொடுக்கப்படும். அதில் எந்தவித மாற்றமும் கிடையாது என்பதை நான் அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

* * * * * *

### போதைப் பொருட்களை அடியோடு ஒழிக்க அதிரடி நடவடிக்கை!

பேரவைத் தலைவர் அவர்களே,

போக்குவரத்துக்கு நெரிசல் இல்லாத வகையில், பொதுமக்களுக்கு இடையூறு இல்லாத வகையில்அதற்கென்று தனித்தனி இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அவ்வாறு ஒதுக்கப்பட்டிருக்கின்ற இடங்களில் அனுமதி பெற்றுத்தான் நீங்கள் கூட்டம் நடத்திட வேண்டும் என்பது விதிமுறை. அந்த விதிமுறைக்கு உட்பட்டு இருந்தால், நிச்சயமாக எதிர்க்கட்சித் தலைவர் சொல்வதுபோல் அனுமதி மறுக்கப்படாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

* * * * * *

பேரவைத் தலைவர் அவர்களே,

அ.தி.மு.க. வினுடைய நான்கு ஆண்டுக் கால ஆட்சியில், எங்கும் குட்கா, எங்கும் போதைப்பொருட்கள் என்ற நிலையில் விட்டுச் செல்லப்ப ட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) டிஜிபி மற்றும் போலீஸ் கமிஷனராக இருந்தவர்களே சி.பி.ஐ. விசாரணை வளையத்திற்குள் வரக்கூடிய அளவிற்கு குட்கா விவகாரம் தலைவிரித்தாடியதை அனைவரும் பார்த்தோம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்நிலையில் ஆட்சிப் பொறுப்பேற்ற நாங்கள், இளைஞர்களை சீரழிக்கக்கூடிய போதைப் பொருட்களை அடியோடு ஒழிக்க அதிரடி நடவடிக்கைகளை எடுத்தோம்; எடுத்துக்கொண்டிருக்கி றோம்.

தமிழ்நாடு வரலாற்றில், போதைப் பொருள் ஒழிப்பிற்காக எனது தலைமையிலேயே மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டைக் கூட்டி, அடுத்தடுத்து தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதன் விளைவாக, அ.தி.மு.க. ஆட்சியைவிட வழக்குகள் பதிவு செய்வதில் 88 விழுக்காடு அதிகம். (மேசையைத் தட்டும் ஒலி)குற்றவாளிகளை கைது செய்துள்ளதில் 214 விழுக்காடு அதிகம். ஹெராயின் போதைப் பொருள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதில் 900 விழுக்காடு அதிகம். கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்கள் அ.தி.மு.க. ஆட்சியில் 57 ஆயிரத்து 925 கிலோ பறிமுதல் செய்யப்பட்ட நிலையில், தி.மு.க. ஆட்சியில் 91 ஆயிரத்து 520 கிலோ பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. போதைப் பொருள் சப்ளை செய்பவர், விற்பவர்களின் பொருளாதார பலத்தை முடக்குவதில் தமிழ்நாடுதான் நாட்டிலேயே முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது. போதைப் பொருள் குற்றத்தில் ஈடுபட்டோர் தமிழ்நாட்டில்தான் 324 விழுக்காடு அதிகமாக குண்டர் சட்டத்தில் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். போதைப் பொருட்கள் போக்குவரத்தில் பயன்படுத்தப்பட்ட வாகனங்களை பறிமுதல் செய்தது 346 விழுக்காடு அதிகம். தமிழக காவல் துறையின் தகவலின் அடிப்படையில் ஆந்திராவில் 4,000 கோடி ரூபாய் மதிப்பிலான 'கேனபிஸ்' அழிக்கப்பட்டது வரலாறு. குட்கா விற்ற 12 ஆயிரத்து 537 கடைகள் மூடப்பட்டன. ஏன் போதைப் பொருட்கள் புழக்கம் மற்ற மாநிலங்களை காட்டிலும் தமிழ்நாட்டில் தான் குறைவாக இருக்கிறது என ஒன்றிய அரசின் ஆய்விலேயே தெரிய வந்துள்ளது. ஒன்றிய அரசின் சார்பில் நடைபெற்ற "போதைப் பொருட்கள் ஒழிப்பு" மாநாட்டில் போதைப் பொருட்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் "தமிழ்நாடு மாடல்" தேசிய அளவில் சிறந்த மாடல் என விவாதிக்கப்பட்டு, மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக்கூறப்பட்டது என்பதையும் நான் தங்கள் மூலமாக அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

* * * * * *

பேரவைத் தலைவர் அவர்களே,

விமானத்தில் ஏறி, அவரை பிடித்ததே தவறு என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்கிறார்களா? (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. உங்களுடைய ஆட்சியிலே I.G., D.G.P., Police Commissioner குட்கா விற்ற விவகாரங்களெல்லாம் தெரியாதா? (குறுக்கீடுகள்) இன்னும் சொல்கிறேன். தமிழ்நாடு அமைதியாக இருக்கின்ற காரணத்தில்தான், தைரியமாக கொள்ளையடிப்பதற்கு வருகிறார்கள். தமிழ்நாடு அமைதியாக இருப்பதுதான் அதற்கு காரணம். ஆனால், இருந்தாலும் அவர்களையும் பிடித்திருக்கிறார்கள். காவல் துறை விழிப்போடு இருந்து, அவனை கைது செய்தது மட்டுமல்ல; கைது செய்து அவனுக்கு தண்டனையும் கொடுத்திருக்கிறது என்பதும் உங்களுக்குத் தெரியும்.

* * * * * *

பேரவைத் தலைவர் அவர்களே,

உங்களுடைய ஆட்சியில், 2020ல், டெல்லியிருந்து வந்து கொள்ளையடித்துக் கொண்டு சென்ற விவகாரமெல்லாம் இருக்கிறது. அதை நீங்கள் மறந்து விடாதீர்கள்.

* * * * * *

பேரவைத் தலைவர் அவர்களே,

நான் தொடக்கத்திலே சொன்னேனே! நீங்கள் பேச்சு தொடங்கிய நேரத்திலே நான் புள்ளிவிவரத்தைச் சொல்லியிருக்கிறேன். உங்களுடைய ஆட்சியில் எத்தனை கொலைகள், கொள்ளைகள் நடைபெற்றிருக்கின்றன, எங்களுடைய ஆட்சி வந்த பிறகு எவ்வளவு

தொடர்ச்சி 4-ஆம் பக்கம்